# திருவள்ளுவர் சுட்டிய உணர்வுகள்

**பேராசிரியர் ப. அருளி**

**இயக்குநர், வேரியல் ஆராய்ச்சி நிறுவனம்,**

**தமிழூர், திலாசுப்பேட்டை, புதுச்சேரி- 605 009**

**மின்னஞ்சல் eraisezhiyan@gmail.com**

1

**ஆய்வுச்சுருக்கம்**

உணர்வெனும் சொல்லாட்சி குறித்தும் அதன் பன்முகப்பட்ட இலக்கிய இலக்கண ஆளுமை வடிவங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைக்க முனைகிறது இந்த ஆய்வுக்கட்டுரை. அச்சவுணர்வு முதலாக வாய்மை உணர்வு ஈறாக அறுபத்தாறு உணர்வுகளின் நிலைக்களங்கள், சொல்லடிகள் ஆகியவற்றைப் பகுத்தாராய்ந்து இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

**ஆய்வுநோக்கம்**

உலகளாவிய நோக்கில் மனிதனைச் செழுமையாக்க, முழுமையாக்க திருவள்ளுவர் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் உட்பொருள்களாகக் கொண்டு அறநூலாகிய திருக்குறளைப் படைத்துள்ளார் என்பதை மெய்ப்பிக்கும் நோக்கில் இந்த ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்**

ஆக்கப்படிமம், குவிப்பு, புடைவடிவம், பொம்மல், பொங்கல், வல்சி, பதன்,

நம் தமிழறிவர் திருவள்ளுவர், தம் குறள்நூலுள் சுட்டிய உணர்வுகள் பற்றிய பொருண்மையடங்கலே, இக் கட்டுரையாக்கம்!.

**முன்னுரை**

உணர்வெனும் சொல்லாட்சியும் அதன் பன்னிலைப்பட்ட இலக்கிய - இலக்கண ஆளுமை வகை வடிவங்களும், நம் பண்டைப் பழம்பெரும் நூல்கள் மிகப் பலவற்றுள்ளும் பாரிய பதிவுகள் கொண்டன!

குறளுக்குள்ளேயே, இவ் “உணர்வு” எனும் தொழிற்பெயர் வடிவுசார் வினையுருச் சொல்லாகிய “உணர்” என்பதினின்றெழுந்த புடை வடிவ ஆக்கங்கள் நூற்றுக்கும் மேற்பட்ட பதிவிடங்களிலாகிப் படிந்துள! உணரல் – உணர்தல்- உணர்வு என்றவாறான தொழிற்பெயர்

வடிவங்களுடன், “உணர்ச்சி” எனும் வலித்தமான உருச்சொல்லும் அவற்றின் குவிப்பினுள் உளது!

**உணர்வு - உணர்ச்சி வரையறை**

முதற்கண்ணாக - நாம் ஆழ்ந்து நோக்கற்குரிய சொற்களாக, “உணர்வு” என்பதுவும் - “உணர்ச்சி” என்பதுவும் தலைதூக்கி நிற்கின்றன! இவ் இரண்டனுக்கும் உரிய பொருட்பாட்டுத்தீர்வுகளை வரையறையுற விளங்கிக்கொண்டாலேயே - இம் மேற்குறிப்பிட்டுள்ள பொருண்மைக்குரிய ஆக்கப்படிமத்துள்ளாக நாம் நுழையவியலும்!....

பண்டைய தெள்ளியநோக்கு முறையில், “உணர்ச்சி” என்பது, பண்புப் பெயராகக் கொள்ளப்பெறுவதாகும்! மொழிவேரியல் முறைமையில் – இவ் வுணர்வும் – உணர்ச்சியும் “உணர்” - எனும் அடிப்படை முதனிலையினின்று வகுபட்டு எழுந்தனவே! எது - எவ்வது ஆயினும், பயன்படுத்தப்பாங்கு வளர்ச்சியுள் – பொருட்பாட்டுத் தகைமைச்சொற்கள் கருத்துச்செழுமை பெற்றுத் தனிப்பிரிந்து துலங்குவதென்பது, மொழியியல்புகளுள் ஒன்று!

சொல்தோற்றக் காலத்தொடக்கத்தே - உண் - உண்ணு – உண்ணுவித்தல் - உண்பித்தல் (ஊர் + உண்ணி > ஊருண்ணி >) ஊருணி, உண்ணி, உண்பு, உண்டல் என்றவாறான மிகப்பல சொற்களும், உட்கொள்ளுகை என்னும் கருத்தமைவிலேயே உருவாக்கங்கள் பெற்றுள!

“புய்” - எனும் துளைக்கருத்துவேர் வழியே, (புய் > புயி >) புசி எனும் வினைச்சொல் தோற்றத்துள் – “துளைவழி உட்கொள்ளுதல்” எனும் கருத்துக்கரு உள்ளமையைக் காணலாகும்!

“உட்கொள்ளுகை” எனுந் தொடக்கக்கருத்தமைவைத் தாண்டிக், – காலவளர்ச்சியில் - வேக்கி - அவித்து - பொரித்து – வறுத்து - வதக்கி - சுட்டு - காயவைத்துப் பதன்படுத்திய ஊண்பொருளை, “உணவு” என்றவாறு குறித்து வழங்கியமை – வேறொரு வேர்ப்பொருள் வகைமையில் உருவாக்கிக்கொண்டதாகும்.

புழுக்கு – (“குடவர் புழுக்கிய பொங்கவிழ்ப் புன்கம்” (அகம் : 393 : 16) புற்கை = புல்லரிசிச்சோறு, பொம்மல் = வேக்குதலாற் பருப்பமெய்திய தவசச்சோறு. (“பொம்மல் பெறுகுவிர்” (மலைபடுகடாம் : 169) மிதவை = பொம்மல், பொங்கல்…

"உல்" வெப்பக் கருத்துவேர்.

உல் + அர் > உலர். உலர்தல் = வெப்பத்தினால் வாடுதல்; காய்வுறுதல்.

"உலந்த" = வற்றிவிட்டன (குறள் : 1174) (பலவின்பால் படர்க்கை இறந்தகால வினைமுற்று)

உலர் > உலரு > உலறு (அகம் : 19)

உல் > உலை = நெருப்புள்ள அடுப்பு. (புறம் : 26 : 9)

சோறு சமைத்தற்காகக் கொதிக்கவைக்கும் நீர் (நாலடி : 114)

உல் > உள் > உண் > உண் + அகு > உணகு > உணக்கு.

உணக்குதல் = உலர்த்துதல், காயவைத்தல் (நற்றிணை : 63 : 2)

"தொடிப்புழுதி கஃசா உணக்கின்" (குறள் : 1037)

உணகு > உணங்கு : உணங்குதல் = உலர்தல். (ஐங்குறுநூறு : 207)

உணங்கு + அல் > உணங்கல் = உலர்த்திய தவசம், காயவைத்த இறைச்சி.

உண் + ண் + அம் > உண்ணம் = வெப்பம் "உண்ண வண்ணத்து ஒளி"

(தேவாரம்: 3 : 103 : 6)

உல் > உள் > உண் > உண் + அவு > உணவு.

வெப்புறுத்தி – அதுவாவது, - வேகுவித்து (வேவித்து) அல்லது அவித்துச் (< உவித்து) சமைத்தெடுத்த ஊண்பொருள் ; உண்பொருள்.

அடுசில் > அடிசில், ஆகி உணவு குறித்துள்ளமையும் கருதத்தக்கது!

அம் > அமை > சமை. சமைத்தல் = பதனுற வெப்புறுத்தி உணா உருவாக்குதல். (மேலுங் கருதுக : சமையல்.)

உணவு = பதம், சோறு (பிங்கலம் : 1102)

உணவு > உணா. (ஒ. நோ : நிலவு > நிலா. இரவு > இரா)

உண் > ஊண் = உணவு.

பதம் = செவ்வி, பதப்பாட்டு நிலை (பதம் : குறள் : 548, 99)

பதம் - பதன் = பதப்படுத்தப் பெற்ற உணவு

அவிழ்ப்பதம் : சோறாகிய உணவு. (புறம் : 159 : 9 - 12)

“உணாவே வல்சி….. பதமே உணவெனலாகும்” (பிங்கலம் : 172)

உணங்கு = வெப்பத்திற் காய்வுறு, வாடு, மெலி

(காண்க : ஊடல் உணங்க விடுவாரோடு” (குறள் : 1310)

உண் தற்கேற்ற நிலையில் - ஊண்பொருளின் கடுமையை மெலிதாக்குதலும் - இவ் அடுதலால் நிகழ்கின்றமையும் உடன்கருதலாம்!

உணங்கு + அல் > உணங்கல் = உணவு. (“ஓடு கையேந்தி…. உணங்கல் கவர்வார்” தேவாரம் : 5: 5: 3) (“உணங்கல்… உண்ணலாம்” திருக்கோவையார் : 235)

இவ் வகையிலான ஒப்பீடுகளை முற்பாடாகக் கருதியுணர்ந்த பின்னரேயே -“உணவு” எனும் சொல், எத்தகு அடிப்படையில் பதனாகி உருப்பெற்றுள்ளது எனும் உண்மையைக் காணவியல்கின்றது!

மேற்குறித்தவாறான கருத்துக்களுள் உள்நுழைந்து ஊறி - நிலைநின்ற பின்னரேயே, “உணர்” எனும் வினையுருவின் கருப்பொருளையும் விளங்கக்கூடும்!

பதம் (பதன்) – என்பதுவே, பதப்பாடு சமைந்த உருவாக்கமாகிய “உணவு” என்பதனை முன்னர்க் கண்டோம்! அத்தகு பங்கில் - பதப்பாடு துலங்க உணரப்பெறும் அறிவுநிலை “உணர்வு” என்னப்பெற்றது!

“உணர்வு” என்றும் - “உணர்ச்சி” என்றும் அன்றைக்கு வழங்கிய இரு வேறுபாட்டுப் பயன்படுத்தப் பொருண்மைகளைத் திருவள்ளுவர் உற்று உள்நோக்கியுணர்ந்து ஆண்டுள்ளமை குறட்பதிவிடங்களில் துலங்குகின்றது!

உணர்வு (குறள் : 354) - உணர்வது (குறள் : 718) - உணர்வின் (குறள் : 420) என்றவாறு உணர்வு சுட்டப்பெற்ற இடங்களில் - முற்சுட்டிய பதப்பாடு துலங்க உணரப்பெறுவதாகிய அறிவுநிலை எனும் பொருட்பாட்டினையும் - “உணர்ச்சி” (குறள் : 453; 976) (1. பொதுஉணர்ச்சி ( = ஒத்தவுணர்ச்சி) 2. மனத்தின் உணர்ச்சி) என்றவாறான பொருட்பாடுகளையும் உற்றறிகையில், அவரின் நுண்மை சான்ற பொருள்கோள் முடிபுகள் நமக்கு விளக்கமாகின்றன!

உணர்ச்சி என்பதனினும், - உணர்வு என்பது பதப்பாடு எய்திய அறிவுத் தெளிவுடைய பண்புக்கான பெயரீடாக, அவர் உட்கொண்டு பயன்படுத்தி யுள்ளமையை நாம் முதற்கண் விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்!

உணர்ச்சி என்பது "உணர்வு" என்னும்படியான பொருட்பாட்டுத் தகைமையொடு அவரால் பயன்படுத்தப்பெற்றுள்ளமையும் காணத்தக்கது. "உணர்ச்சிதான் நட்பாங் கிழமை தரும்" (குறள் : 785) இவ் விடத்துப் பதிவுற்றுள்ள உணர்ச்சி என்பது, ஒத்தஉணர்வு எனும் பொருண்மைக்கு ஓரளவுக்கான சாறு சான்றது! எனினும், அது உணர்வுக்கான பொருண்மை முற்றிநிறைந்ததன்று!

**உணர்வும் உணர்ச்சியும்**

உணர்ச்சி : "சிறியார் உணர்ச்சியுள்" (குறள் : 976) எனத்தொடங்கும் குறளுள் பயில்வுறும் "உணர்ச்சி" எனும் சொல்லாட்சிக்குள்ளேயே, அதன் முழுப் பொருண்மையும் பொதிந்துள்ளமை புலனாகின்றது!.

உணர்வு: "மருள் நீங்கிய மாசறு காட்சி" (குறள் : 312) – "ஐயத்தின் நீங்கித் தெளிகை" (குறள் : 353) – "மெய்ப்பொருள் காணும் அறிவு" (குறள்: 355) ஓர்த்து உள்ளம் உள்ளது தெளிகை (357) என்றவாறான பதப்பாட்டுச் செறிவுப் பொருண்மை கொண்டதே உணர்வு!

அறிவுத்தெளிவாகிய உணர்வு – வாழ்வியக்கச் செயன்முறை கொண்டுள்ள உணர்ச்சி ஆகிய இருகூறுகளும் திணிந்த அறநூலே, திருக்குறள்! பயிலத் தொடங்கிய பண்டைய காலத்தேயே – "அறம்" எனும் பெயர்கொண்டே முழு முப்பானூலும் சுட்டப்பெற்றமை ஈண்டுக் கருதத்தக்கது! அறப்பகுதி மட்டுமே அறங்கூறும் பாற்பாடு கொண்டதன்று! பொருளும் அறன் விளக்குவதே! காமமும் அறப்பொருண்மை சான்றதே!

"சுட்டுதல்" என்பதன் பொருண்மை: தான் கருதிய ஒன்றனைக் குறித்துப் பிறனொருவனுக்கு அதனை நோக்குறுத்தல் எனும் வினைப்பெயரே "சுட்டுதல்" எனும் பொருண்மையது!

குறள்கற்பார் உணர்ந்து இயங்குதற்கெனச் சுட்டிய உணர்வுகள் பற்றியதுவே, இவ் வாய்வுரைக் கட்டு! (காண்க: "சுட்டிக்கூறல்" தொல். சொல். 36 : 1) மேலுங்கருத்து விளங்கக் காண்க : "சுட்டு விரல்" (நற்றிணை : 149 : 2)

நம்மைத் துலக்கி நெறிப்படுத்துவதற்கென்றே - உணர்வையும் உணர்ச்சியையும் உட்பொருள்களாகக் கொண்டு, இவ் அறத்தைப் பாடியுள்ளார்! இதனுள், - அவர் சுட்டும் உணர்வுகள் எவை எனவும் - அவற்றிற்கு 'அன்மை' கொண்டனவாகிய உணர்ச்சிகள் எவை எனவும் காண்பதுவே, இவ் வடங்கலை முழுமை கொளுத்தும்!....

**திருவள்ளுவர் சுட்டும் உணர்வுகள்**

1. அச்சவுணர்வு : (அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில் – குறள்: 428)
2. அடக்கவுணர்வு: ("காக்க பொருளா அடக்கத்தை" (குறள் 122, 123, 124, 130)

நாவடக்கவுணர்வு (குறள் : 127, 129)

3. அமைவுணர்வு (: போதும் என்று அமைதல் - குறள் : 1178)

4. அருளுணர்வு : (இரக்கம், இரங்குவதாகிய மாந்தநேயவுணர்வு) (குறள் 176, 141, 242, 243, 245, 246, 247, 248, 251, 252, 254, 285, 757, 914, 938)

5. அவாவுணர்வு (:விருப்ப நினைவு - குறள்: 35, 361, 364, 365, 368, 369, 370, 513, 1075, 1310)

6. அழுக்காறாமையுணர்வு. (அதிகாரத் தலைப்பு)

(அழுக்கு + உறு > அழுக்கூறு = பொறாமையழுக்கு உறுகை.

அழுக்கூறு > அழுக்காறு (உயிரிசைவு மாற்றம் - மொழி வேரியல்

முறையில்…) (harmonic sequence of vowels)

அழுக்குறு > (அழுக்கொறு) > அழுக்கறு

ஒ.நோ. அழுக்கறுப்பான் = பொறாமைப்படுகிறவன் (குறள் 163, 166)

(திரிபுமுறை : உகர - ஒகர - அகரத் திரிபு)

7. அளவறிவுணர்வு : கருதுக : "அளவறிந்தார் நெஞ்சத்து அறம் போல" (288)

"அளவறியான்" (474) "அளவறிந்தீதல்" (477)

"அளவறிந்து வாழ்தல்" (479)

8. அறவுணர்வு : (கருதுக: (அறத்துப்பால் 1-38 அதி.) துறவறவியல் : 25 : 38)

"இல்லறவியல்" (5 - 24) குறள் : 33, 321, 909. நல்வினை பற்றிய

உணர்வு 39, 76, 543, 31, 32, 37, 46, 30, 34, 40, 45, 48, 49, 142, 147, 148, 150, 157, 163, 173, 179, 182, 189, 366, 384.

9. அறிவுணர்வு : (அறிவுடைமை அதி. 43) (குறிப்பறிவுணர்வு அதி : 128)

10. அற்றமறைப்புணர்வு: (அற்றம் + மறைப்பு + உணர்வு = மானவுணர்வு

மறைக்கத்தக்க மானப்பண்பாகிய உணர்வு.

"அற்ற மறைத்தலோ புல்லறிவு" (846)

11. அன்புணர்வு : (அன்பு + உணர்வு) உள்ளத்து உயர் நெகிழ்ச்சியுணர்வு

தொடர்புடையார்மாட்டும் உளதாகும் உளநெகிழ்ச்சியுணர்வு (தன்னலம் கேடுறாவாறு பிறர்நலம் பேணக்காட்டும் மனநெகிழ்ச்சியுணர்வு, என்பார், பெருஞ்சித்திரனார்!) காண்க: அன்புடைமை அதி : 8)

12. ஆண்மையுணர்வு: (1.ஆள் > ஆளு (வினைச்சொல்) ஆள்+தன்மை > ஆண்மை = ஆளுந்தன்மை : ஆளுந்தன்மையின்கண் வரும் இயல்புணர்வு (குறள் : 663) - வேளாண்மை (81, 212) - பேராண்மை 148, 773, 962 ஒப்புரவாண்மை (480) – குடியாண்மை (480) - ஊராண்மை (773) - வினையாண்மை (904) – சான்றாண்மை 981 – 989, 990 - நல்லாண்மை (1026, 1133, 1134.

2. ஆள் (பெயர்)+மை > ஆள் > ஆண் (பெயர்). ஆண்+மை >

ஆண்மை = ஆணின் தன்மை (virility) "ஆண்மையின்… பெண்ணே பெருமையுடைத்து" (907).

13. ஆய்வுணர்வு : நுண்ணறிவுகொண்டு ஆய்ந்தறியும் உணர்வு (குறள் 198, 918, 914)

ஆர = நிறைய, நிறைவார, மிக, உற்ற. ஆர + ஆய்வு >

ஆராய்வு - உணர்வு (914) நட்பாராய்தல் - உணர்வு (அதி 80).

14. இயல்புணர்வு : (காண்க அறிவுணர்வு)

15. இரவச்சவுணர்வு: (இரவு + அச்சம் + உணர்வு) (அதி : 107)

16. இன்பவுணர்வு : இன்பு + உணர்வு > இன்புணர்வு = இன்பவுணர்வு.

இன்பம் + உணர்வு > இன்புணர்வு = மகிழ்வுணர்வு.

(குறள் : 75, 34, 399, 39, 65, 98, 156, 173…)

17. ஈகையுணர்வு = கொடையுணர்வு: காண்க "ஈத்துவக்கும் இன்பம்" (228)

ஈகை : வறியார்க்கொன்று ஈவதே ஈகை (221)

18. உவப்புணர்வு (உவப்பு + உணர்வு) உவகையுணர்வு (ஊடலுவகை)

மகிழ்ச்சியுணர்வு (304, 432, 531)

19. உள்ளுணர்வு (ஈண்டு, உள் + உணர்வு அன்று.) உள்ளுதலால் வந்தெய்தும் உணர்வு. உள்ளல் = நினைத்தல் (குறள்: 539)

20. உறுத்துணர்வு: உணர்விப்பு உணர்வு (ஈண்டு - உறுத்தும் உணர்வு, அன்று)

கருதுக: அறன் வலியுறுத்தல் (அதி: 8)

அலர் அறிவுறுத்தல் (அதி: 109); தகையணங்குறுத்தல் (அதி.115)

குறிப்பறிவுறுத்தல் (அதி. 128)

21. ஊக்கவுணர்வு: உள்ளக்கிளர்ச்சியாலாகிய உணர்வு (382) மனம் மெலிதலின்றி வினைசெய்தற்கண் கிளர்ச்சியுடைத்தாகும் உணர்வு (அதி. 60)

22. ஐயுறவுணர்வு (ஐயுறவு + உணர்வு) (குறள்: 510) ஐயப்பாடு (587)

23. ஒழுக்கவுணர்வு: (ஒழுகு செந்நெறியறிந்து - அதனொடு ஒன்றியியங்கும் இயல்புணர்வு)

24. ஓர்ப்புணர்வு : தெளிய ஆராயும் உணர்வு (குறள்: 357)

25. கடப்பாட்டுணர்வு : கடமை = கடமையுணர்வு (காண்க : குறள்: 211)

26. கடனறிவுணர்வு : (கடன் = மானம்) (குறள்: 1033) (கடன் = முறைமை) (குறள் : 638, 687, 802)

27. கண்ணோட்டவுணர்வு : (கண் + ஓட்டம்) கண்ணோட்டம்

    1. நடுநிலை திறம்பிய கண்ணோட்டம்
    2. நடுநிலை திறம்பாக் கண்ணோட்டம்

    திறம்பியது 1. (குறள் : 541) 2. திறம்பாதது (குறள் : (571 - 580)

28. கல்வியுணர்வு : கற்றற்கான உணர்வு (அதி. 40) (அதி. 41)

29. காட்சியுணர்வு : 1. காண்டல், காணுதல் (குறள்: 386)

    2. காட்சி = அறிவு (352, 258, 174, 199, 218, 654, 699)

30. காதலுணர்வு : 1. (காதல் = வேட்கை, விருப்பம், அன்பு) (284, 440, 921, 1298)

2. (காதல் = காம வேட்கை 1195, 1242)

31. காப்புணர்வு (காப்பு உணர்வு) : காப்பு = பாதுகாப்பு (744)

காப்பு = காப்பாற்றிக்கொள்ளுகை (878)

காப்பு = போற்றிக்காத்தல் (642)

32. காமவுணர்வு: காமம் = பெண்ணின்பால் இன்பவேட்கையுறும் காதல் (காண்க : அதி. 109 முதல் 133 வரை)

33. குடிசெயலுணர்வு: தான் பிறந்த குடியை உயரச்செய்தற்கு விழையும் திறன் நோக்கிய உணர்வு (அதி. 108)

34. கூடலுணர்வு : புணர்ச்சிவிழைச்சு - உணர்வு (காண்க ; காம உணர்வு)

கூடல் = புணர்ச்சி (1284,1327,1328)

35. கேள்வியறிவுணர்வு: கற்றார் கூற்றினைக் கேட்கவிழையும் அறிவுணர்வு (அதி. 42)

36. கொடையுணர்வு : (காண்க : ஈகையுணர்வு)

37. கொள்கையுணர்வு: =கடைப்பிடியுணர்வு, ஒழுக்கக் கடைப்பிடிப்புணர்வு (குறள்:1019, 899)

38. சார்வுணர்வு : சார்வு = துணையாதல் (15, 76, 359, 449, 900)

39. சால்புணர்வு: (சால்பு + உணர்வு) நிறைகுணஞ்சார் பண்பாட்டுணர்வு.

"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு ஐந்து

சால்பூன்றிய தூண்" (983) (சால்பு = சான்றாண்மை) (981 - 990)

40. சுவையுணர்வு: சுவைப்பு உணர்வு (காண்க: 27, 253, 420)

41. செருக்குணர்வு: = மேம்பாடு. மேம்பாட்டுணர்வு (613) மதிப்பு. தருக்கு: (1193)

42. தவவுணர்வு: (தவம் = துறவு) காண்க: துறவுணர்வு

43. துணிவுணர்வு: கலங்காது தீர்வுமுடிவுகொண்டு செயற்குத்துணிந்து முனைதற்கான உணர்வு. அவ் வினையே துணிவாற்றுதல். அதற்கான உணர்வு, துணிவுணர்வு (669, 671)

44. துய்ப்புணர்வு: (துய்த்தல் = துளைக்குட் செலுத்துதல்; உண்ணுதல்.

துய்த்தல் = புலன்களால் நுகர்தல். துய்ப்பு = நுகர்வு.

உண்ணுதல். "புதுப்பூத் துய்த்த வாய" (அகம்: 15 : 14)

துய்ப்பு = நுகர்ச்சி, உட்கொள்ளுகை, உண்ணுகை.

"துய்க்க துவரப் பசித்து" (குறள் : 944)

துய்ப்பு > துப்பு = உணவு (குறள்: 121)

45. துறவுணர்வு: துறவு + உணர்வு. நீத்தலுணர்வு. காண்க: தவம் (அதி:27)

46. தெரிவுணர்வு: (தெரிவு + உணர்வு) தெரிவு = ஆராய்ந்து அறிகை.

47. தெளிவுணர்வு: தெரிவுணர்வு, அறிவுணர்வு, ஆய்வுணர்வு, ஆய்வறிவுணர்வு.

48. தேர்ச்சியுணர்வு: தெரிவுணர்வு

49. தேற்றவுணர்வு: (தேற்றம் = தேறுகை நிலை)

50. நட்புணர்வு : (நட்பு + உணர்வு) (அதி:79) (701 - 790)

நட்பாராய்தல் (791 - 800) பழைமை (801 - 810)

51. நயனுணர்வு: நயன் = நயன்மை, நடுவுநிலைமை, அறநெறி நிலை, நேர்மை (994)

52. நாணுணர்வு: நாண் = நாணு : 1. கருமத்தால் நாணுகை

2. பெண்டிர்க்குரிய வெட்கப்பண்பு.

53. நிறையுணர்வு: 1. நிறை = மறை பிறர் அறியாமை (864, 917)

2. தானே தடுத்து - அடக்கி - நிறுத்திவைத்துக் காத்துக் கொள்ளும் - மகளிரின் கற்புநெறியாகிய சால்பு.

"நிறை காக்கும் காப்பே தலை" (குறள் : 57)

54. நினைவுணர்வு: (நினைவு + உணர்வு) (அதி: 121) முன்னிலை எண்ணங்களை மீண்டுங்கருதிப்பார்க்கும் வினையுணர்வு.

55. நுண்ணறிவுணர்வு: (நுண்ணறிவு + உணர்வு) நுண்ணுணர்வு வேறு, நுண்ணறிவுணர்வு வேறு. நுண்ணிய உணர்வே நுண்ணுணர்வு.

நுண்மை என்பது, நுண்ணிய அறிவிற்குப்பொருள் காழ்த்தபின்,

நுண்ணியம் = நுண்ணிய அறிவுடையேம் என்றவாறாகப் பொருண்மை

செழித்தது (காண்க: 710)

56. பணிவுணர்வு: (பணிதல் : தாழ்ந்து அடங்குதல் (குறள் : 125) (மேலுங் காண்க:

"பணியுமாம் என்றும் பெருமை" (குறள் : 976) பள் > பள் + ள் + அம் >

பள்ளம் = தாழ் நிலப்பகுதி. பள் > பண் > பண் + இ > பணி = தாழ், உள்ளொடுங்கு, ஒடுங்கிவினைபுரி. பணிதல், பணிவு – ஆகியன, இவ் வழியில் உருப்பெற்றனவே! பள் > பண் + பண் + பு > பண்பு. இதுவும் இவ் வழியதே. குள் : தாழ்ச்சிக்கருத்துச் சொன்முதனிலை. குள் > குளம் குள் > குண் > குணம் = பண்பு)

57. பற்றுணர்வு: பற்று = தொடர்பு (506) பிடிப்பு (438) நசை, விருப்பம் (275, 349, 350)

58. புணர்வுணர்வு: புணர்வு = புணர்ச்சி, புணர்தல், கலவி. (காண்க: கூடலுணர்வு)

59. பெருமிதவுணர்வு: பெருமிதம் = மேம்பாடு (குறள்: 431) தருக்கு (979)

60. பொறையுணர்வு = தமக்கு மிகைசெய்தவழித் - தாமும் அதனை அவன்கட் செய்யாது, பொறுத்து ஆற்றுதலாகிய உணர்வு (அதி.16)

61. மறவுணர்வு: மறம் = வீற்றுத்திறம் (வீரம்) (766) (778)

62. மாண்புணர்வு: (மாண்பு + உணர்வு) நற்குண நற்செய்கைசார் உணர்வு (432)

63. மானவுணர்வு: எந் நிலையினும் தாழ்வுறாது - பெருமிதமேம்பாட்டிலேயே நிலைநிற்கும் பெருமைப்பண்பு = மானம். “மா” என்னும் பேரளவு நிலை வேர்ச்சொல்லினின்று உருவாயது. மா + அனம் > மானம் = பெருமை, பேரளவு. மானித்தல் = அளத்தல் (அதி. 97)

64. மெய்யுணர்வு: மெய்ம்மையை உணர்தல் (அதி. 36)

65. மோப்பவுணர்வு: மோத்தல் = முகர்தல் (90)

66. வாய்மையுணர்வு: (காண்க: மெய்மையுணர்வு) (அதி.30)

**அறுதியுரை :**

மனம் தளையவிழ்ந்தவாறு கண்டவிடத்துக்கும் பாயும் காட்டு மா! சென்றவிடத்தால் செலும் அது! “சென்றவிடத்தால் செலவிடாது தீது ஒருவி அம் மனத்தைக் கட்டுப்படுத்தி நன்றின்பால் உய்ப்பதுதான், அறிவானது மேற்கொள்ள வேண்டிய வேலையாகும்!” என்றார், ஒரு குறளுள்! (குறள்: 422) மனத்தின் அடங்காத்தன்மையை, அப் பெருமகன் தம் மேதைமையால் தெளிந்து வைத்திருந்தமையாலேயே - மனத்தின் உணர்தல்நிலையினை உணர்வினுக்கு ஈடாக வையாது, அதன் வினைத்தகைமையை “உணர்ச்சி” எனும் பட்டியிலேயே அடைத்தார்! “மனத்தானாம் மாந்தர்க்கு உணர்ச்சி” (குறள் 453) என்பதனுள், இதனை விளங்கிக்கொள்ளலாம்!

மா = பெருமை. மா + அனம் (ஈறு) > மானம் (ஒ.நோ: தா + அனம் > தானம்) மானம் =

பெருமை, பேரளவு, பெருந்தகைமையாகிய பண்பு. இம் "மானம்" - உணர்வு சான்றது! ஆகவே, இது மானவுணர்வு! இதன் தகைமையை, "மானம் உடையவர்" ஒளி தொழுதேத்தும் உலகு" எனும் குறள்வரியுள் தெளியலாம்! (குறள் 970) இம் "மானம்" எனும் சொல், உணர்வுக்கு உரியது!

மா = கருமை (மா = கரிய. காண்க: குறள் 617) மா + அனம் > மானம் = (கருமை > குற்றம். ஒ.நோ: மா > மாசு = கருமை > அழுக்கு > குற்றம்) மானம் = குற்றம் (கருதுக "கவரிமா அன்னார் உயிர்நீப்பர் மானம் வரின்" (குறள் 970) இவ்விடத்து வரும் "மானம்", குற்றம் என்று மட்டுமே பொருள்படுவதாகும். இம் "மானம்" உணர்ச்சி! முன்னர்க் கூறிய அம் "மானம்" பெருந்தகைமைப் பண்பு! அம் மானம், உணர்வு!

திருவள்ளுவரின் அறிவுவயப்பட்டே, நாம் இம் முடிபுக்கு வர வேண்டுவதாயிற்று!

திருவள்ளுவரின் - உணர்வுக்கும் உணர்ச்சிக்கும் இடையிலான பொருட்பிரிப்புத் தீர்வு, இவ் வகைப்பட்டதே! அவரின் தீர்வுமுறை அடிப்படையிலேயே - அவர் சுட்டிய உணர்வுகள் மட்டுமே, இக் கட்டுரைக்கெனப் பிரித்தறிந்துணர்ந்து பட்டியற்படுத்தப்பட்டுளது!

அப் பெருமகனாரின் பேரறிவாண்மைக்கு - இத் தகு தீர்வுகோள் முறையுங்கூட, ஓர் அறிகரியாய் முன்னிற்கின்றது!